# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2088/61 - 2018 සැප්තැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2018.09.14

*2088/61 ஆம் இலக்கம் – 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III – காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: GODS/LND/05/ACQ/40.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/9/2013/WS/ 23.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கொடகவெல பிரதேச செயலாளர் பிரிவில், அடகலன்பன்ன கோறளே, தபகம் பத்துவ சிறு பிரிவில், பலவின்ன கிராமத்தில், இல. 223 - E, பலவின்ன வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இ. கி. வ. 695 உடைய நில வரைபடத்தின் மேலதிக இல. 10, பத்திர இல. 17 இல் துண்டு இல. 2691 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும் கீழே விபரிக்கப்பட்டுள்ளதுமான காணித் துண்டு:

*01.* **துண்டு இல. 2691**

காணியின் பெயர் : தலகஹ கொரடுவ, ஹிகுரகல யாய, ஹிகுரகலே ஹேன; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : டபிள்யூ. எம். பொடி அப்புஹாமி, மொரகஹ அதுர, பலவின்ன, பல்லேபெத்த; விஸ்தீரணம்: 0.0025 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி மு. ப 9.00 மணிக்கு கொடகவெல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பி. எஸ். ஜீ. றுவண்சிறி,
பிரதேச செயலாளர்,
கொடகவெல.

பிரதேச செயலகம்,
கொடகவெல,
2018, ஒற்றோபர் 07.

*9 - 832*

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/HAR/4/2/1/23.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின்
குறிப்பு இல.: LD/5/2007/WS/ 340.

2018, சனவரி 08 ஆந் திகதிய 2053/9 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பதுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என அறிவிக்கப்பட்டிருந்த அறிவித்தலின் திகதியும் நேரமும் 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு என திருத்தம் செய்யப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகிறேன்.

ஜே. எம். ஜே. கே. ஜயசுந்தர,
பிரதேச செயலாளர்,
ஹாரிஸ்பதுவ.

பிரதேச செயலகம்,
ஹாரிஸ்பதுவ,
குருநாகல் வீதி, நுகவெல,
2018, செத்தெம்பர் 11.

9 - 833

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.